பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. கிராமங்களில் மக்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதை இந்த அரசு தன் தலையாய கடமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை ஆறாவது ஐந்தாவது திட்டத்தில் விரிவு ஆக்குகின்ற முறையில் அந்த மருத்துவ மனையின் படுக்கை எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கான ஒரு செயற் குறிப்பு மருத்துவ இயக்குநரிடமிருந்து கேட்டிருக்கிறோம். அது வந்தவுடன் ஆவன செய்யப்படும்.

மருத்துவமனைகளில் வைத்தியப் பதிவுறுப் பிரிவுகள்.

* வினா எண். 537—திரு. எம். செல்வராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மருத்துவமனைகளில் நோயாளிகளைப் பற்றிய வைத்திய ரிக்கார்டு பிரிவு ஒன்று ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இதற்கான *விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்படுகிறது.

திரு. துரை கோவிந்தராசன்; பேரவைத் தலைவர் அவர்களே இந்த மருத்துவமனைகளில் கிராமப்புறங்களிலிருந்து வருகிற நோயாளிகள் ஆங்காங்கு இருக்கிற டாக்டர்களை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக—சுலபமாக காரியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு—ஜூனியர் அஸிஸ்டெண்ட்—இளநிலை உதவியாளர் நிலையில் ஒரு ரிஸப்ஷனிஸ்டை பெரிய மருத்துவமனைகளில் நியமித்து உதவி செய்கின்ற நிலையை உண்டு பண்ணுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு மனதிற் கொண்டுதான் மருத்துவமனைகளில் வருகின்ற நோயாளிகளுக்கு எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த சிகிச்சைக்கு போகவேண்டும் என்கின்ற விபரத்தை சொல்லுகின்ற அளவில் கைட் என்று சொல்லுகின்ற அளவில் பெரிய மருத்துவ மனைகளில் நியமிப்பது குறித்து செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* 491ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.